SIVANMANAI



# திருவாசகம்

**பதிகம்: புணர்ச்சிப்பத்து**

**திருப்பெருந்துறையில் அருளியது**

*** * * * ***

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*** * * * ***

சுடர் பொற்குன்றைத் தோளா முத்தை
வாளா தொழும்பு உகந்து
கடைபட்டேனை ஆண்டுகொண்ட
கருணாலயனைக் கருமால் பிரமன்
தடைபட்டு இன்னுஞ் சாரமாட்டாத்
தன்னைத் தந்த என் ஆரமுதைப்
புடைபட்டு இருப்பது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

ஆற்ற கில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்து ஐம்புலன்ஆய
சேற்றில் அழுந்தாச் சிந்தை செய்து
சிவன் எம்பெருமான் என்றுஏத்தி
ஊற்று மணல்போல் நெக்கு நெக்கு
உள்ளே உருகி ஓலம்இட்டுப்
போற்றி நிற்பது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

நீண்டமாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை

THIRUVASAGAM GROUP
Scan this QR code using the WhatsApp Camera to join this group

ஆண்டுகொண்ட என் ஆரமுதை
அள்ளூறு உள்ளத்து அடியார்முன்
வேண்டும் தனையும் வாய்விட்டு அலறி
விரையார் மலர் தூவிப்
பூண்டு கிடப்பது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

அல்லிக் கமலத்து அயனும் மாலும்
அல்லாதவரும் அமரர்கோனும்
சொல்லிப் பரவும் நாமத்தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறை இன்அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

திகழத் திகழும் அடியும் முடியும்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்துங் காணமாட்டா
அம்மான் இம்மாநில முழுதும்
திகழப் பணிகொண்டு என்னை ஆட்கொண்டு
ஆவா என்ற நீர்மை எல்லாம்
புகழப் பெறுவது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

பரிந்து வந்து பரமஆனந்தம்
பண்டே அடியேற்கு அருள் செய்யப்
பிரிந்து போந்து பெருமாநிலத்தில்
அருமால் உற்றேன் என்றுஎன்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
உரோமம் சிலிர்ப்ப உகந்து அன்பாய்ப்
புரிந்து நிற்பது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

நினையப் பிறருக்கு அரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனை ஒப்பாரை இல்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டம்

கனையக் கண்ணீர் அருவி பாயக்
கையுங் கூப்பிக் கடிமலரால்
புனையப் பெறுவது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

நெக்குநெக்கு உள் உருகிஉருகி
நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தால் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலும் திருமேனிதிகழ
நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்பது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

தாதாய் மூஏழ் உலகுக்கும்
தாயே நாயேன்தனை ஆண்ட
பேதாய் பிறவிப் பிணிக்குஓர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போதும்
ஏதா மணியே என்றுஎன்று ஏத்தி
இரவும் பகலும் எழிலார்பாதப்
போதுஆய்ந்து அணைவது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதும்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க்குஎல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனை ஆண்ட
பார்ப்பானே எம் பரமா என்று
பாடிப்பாடிப் பணிந்து பாதப்
பூப்போது அணைவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*** * * * ***